

திருவாசகம் - 48
பண்டு ஆய நான்மறை கதைவழியில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# பண்டு ஆய நான்மறை கதைவடிவில்

## அனுபவத்திற்கு ஐயமின்மை உரைத்தல்

## திருப்பெருந்துறையில் அருளியது

**பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனுங்**

**கண்டாரு மில்லை கடையேனைத் தொண்டாகக்**

**கொண்டருளுங் கோகழிளங் கோமாற்கு நெஞ்சமே**

**உண்டாமோ கைம்மா றுரை. 01**

தம்பிராசா கதிரேசனிடம் மிகவும் கவலையுடன் வந்து சொன்னார்; "எனக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது. தினமும் சிவபூசை செய்கிறேன். யாருக்கும் நான் துன்பம் செய்யவில்லை. மிகவும் ஒழுக்கமாக வாழ்கிறேன். ஆனால் வாழ்க்கையில் துன்பங்களும், சோதனைகளும் தான் வருகின்றன. ஒரு சில நிமிடங்கள்கூட என்னால் மகிழ்வுடன் இருக்க முடியவில்லை. வாகீசன் சிவனை நம்பாது குடித்து வெறித்துத் திரிகிறான். அவனைக் கண்டிப்பது தாய்க்குப் பிடிப்பதில்லை. அதனால் குடும்பத்தில் தினமும் பிரச்சினைதான். நான் என்ன செய்வதென்று தெரியாமல் கலங்குகிறேன்" என்றார்.

"தம்பிராசா, எல்லாம் விதிப்பயன். சில தீயவர்கள் எந்தவிதக் கவலையும் இன்றிக் கூசாது தீயசெயல்களைச் செய்கின்றனர். அவர்கள் மிகவும் மகிழ்வுடன் இருக்கின்றனர். உதாரணமாகச் சிவநாதனை எடுத்துப்பார். குடிப்பதையும், தீய செயல்களைச் செய்வதையும் தவிர வேறெதுவும் செய்யாதவன். அதுக்குக் காரணம் அவன் மனைவி, மக்கள், பிள்ளைகள் என்று யார் மீதும் அக்கறை இல்லாதவன். அக்கறை என்ற பற்றுத்தான் உன் போன்றவர்களைச் சீரழிக்கிறது. அவனது மகன் அவனைப் போலக் குடித்துவிட்டு வாகனம் மோதி இறந்தவன். அதற்குக்கூடச் சிவநாதன் கவலைப்படவில்லை, அழவில்லை, மூக்குமுட்டக் குடித்தவன். உன்னை நான் அவ்வாறு வாழச் சொல்லவில்லை. உனது மகன் மீதுள்ள பற்றை நீக்கு. அவன் எதையும் செய்யட்டும் என்றுவிட்டு விடு. அப்படி விட்டாயேயானால் சிவநாதனைப் போல உனக்கும் கவலை வராது. நான் எனது பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அவரவர் விதிப்படி எதுவும் நடக்கட்டும் என்று விட்டுவிட்டேன்" தம்பிராசா, வேதங்களுக்கு எட்டாதவன் சிவன். அவன் திருமாலுக்கும், பிரமனுக்கும் விளங்காதவன்.

அத்தகையவனைத் தான் காணுமாறு கிருபை செய்தவன் சிவன். அதற்கு நான் என்ன தைமாறு செய்யப் போகிறேன்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். இதற்குக் காரணமென்ன? அவர் உலகத்தில் பற்று வையாமையேயாகும். நீ எதைச் சொன்னாலும் உனது மகன் அதை ஏற்கமாட்டான். பின் ஏன் அவற்றைச் சொல்லித் துன்பப்படுகிறாய். அவன் உன்னைத் தந்தை என்று நினைக்காதபோது நீ ஏன் அவனை மகன் என்று நினைக்கிறாய். அந்தப் பற்றை விடு. அது சிரமம் தான். அதனால் நீ விரும்பினால் என்னுடன் வந்து இரு. காலம் தான் உனது துன்பங்களைத் தீர்க்க வேண்டும்" என்றார் கதிரேசன்.

**உள்ள மலமூன்றும்மாய உகுபெருந்தேன்**

**வெள்ளந் தரும்பரியின் மேல்வந்து வள்ளல்**

**மருவும் பெருந்துறையை வாழத்துமின்கள் வாழ்த்தக்**

**கருவுங் கெடும்பிறவிக் காடு. 02**

"தம்பிராசா, எமக்கு எல்லாவற்றையும் அருள்பவன் சிவன். சிலர் அதை உணர்வதில்லை. நீ எவ்வாறு பாசத்துடன் அவனை வளர்த்தாய் என்பது எனக்குத் தெரியும். அதன் காரணமாகத்தான் உன்னால் அவன் மீதுள்ள பற்றை நீக்க முடியவில்லை. நாம், பிள்ளைகளை அன்பாக வளர்க்கிறோம். அதைப் பிள்ளைகள் உணருதல் வேண்டும். அவர்கள் உணராவிட்டால் எமக்குத் துன்பங்கள் தான் தொடர்ந்து வரும். ஒருவனுக்குத் தனது பிள்ளை இறந்தால் ஒரு சில நாட்களுக்குப் பெரும் துன்பமாக இருக்கும். பின் அந்தத் துயரத்தை ஒதுக்கிவிட்டுத் தனது வேலைகளை அவன் பார்ப்பான். இது உலக இயல்பு. நவரத்தினத்தின் மகள் அம்பிகை நாதனைக் காதலித்துத் திருமணம் செய்தவள். அவள் நோய்வாய்ப்பட்டு இறந்த சில மாதங்களில் அவன் இன்னொருத்தியைத் திருமணம் செய்துவிட்டான். அதுதான் உலகின் இயல்பு. அவளை நினைத்துக்கொண்டு வாழ்வதால் அவன் எதையும் அடைய மாட்டான். அது அவனுக்குப் பெரும் துன்பங்களைக் கொடுக்கும். இதைக் குறைசொல்வோர் உணருதல் வேண்டும். இவற்றை உணர்பவன் மேலானவனாகிறான். துன்பங்களில் இருந்து விடுபடுகிறான். இவற்றை உணர்ந்தால் பற்றுக்கள் அகன்றுவிடும். பற்றற்றபின் சிவனை வணங்கிப்பார். மனதில் நிம்மதியும், மகிழ்ச்சியும் வந்து சேரும். "சிவஞானம் என்னும் தேனை சிவன் தனது அடியவர்களுக்கு அருள்கிறான். அதன் விளைவாக மும்மலங்களும் அகல்கின்றன. பிறவிக்காடு வேரோடு அழிந்து போகிறது" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். மகன் மீதுள்ள பற்று உனது மகிழ்ச்சி, இன்பம்,

நிம்மதி யாவற்றையும் அழித்து விட்டது. அது தொடர்ந்தால் உன்னையும் அழித்து விடும். பற்றென்பது மனச்சாட்சியையும் மாற்றவல்லது. இறைவனை நம்ப வைப்பதும், அகல வைப்பதும் அது தான். அதனால் நீ முழுமனதுடன் இறைவனை ஒரு பத்துத் தினங்கள் வணங்கு. அதன் பின் சொல்" என்றார் கதிரேசன்.

**காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்**

**நாட்டிற் பரிப்பாகன் நம்வினையை வீட்டி**

**அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்**

**மருளுங் கெடநெஞ்சே வாழ்த்து. 03**

"தம்பிராசா, சிவன் அடியவர்களுக்கு எளியவன். அவன் அடியவர்களின் துயரைத் தீர்ப்பதற்காக எந்த வடிவிலும் வந்து உதவி செய்வான். அவன் அரிச்சுனனுக்காக வேடனின் வடிவில் வந்து அருள் செய்தவன். கடலில் வலைஞனாக வந்தவன். எனக்காக அவன் குதிரைப் பாகனாக வந்தவன். அவனை வணங்கினால் வணங்குபவனின் துன்பங்கள் மறையும். அக்ஞானஇருள் அகலும்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். சிவன் தகுதி, தாரதரம், சாதி. உயர்வு தாழ்வு பாராது அடியார்களின் விருப்பத்திற்காக எதையும் செய்ய வல்லவன். மனிதர்கள் எல்லாம் தங்களது முயற்சியால் செய்து முடிக்கலாம் என்று நினைத்து உழைத்து உழைத்துக் களைப்புற்று இறுதியில் இயலாமை காரணமாகவே இறைவனைச் சரணடைகின்றனர். இனி உன்னால் முடியாது என்று நீ தீர்மானித்துப் புலம்ப ஆரம்பித்து விட்டாய். அந்த எண்ணத்தை முதலில் மாற்று. என்னால் முடியாது. சிவனருள் இருந்தால் முடியாத செயல்கள் எதுவும் இல்லை என்று முடிவெடு. அந்த முடிவு சிவனை அருளச் செய்யும். சிவனது அருள் பேரலையைப் போன்றது. அதனால் தள்ளிச் செல்லப்படாத பொருட்களே இல்லை. அப்படியிருக்க உனது கவலையாகிய சிறு துரும்பைத் தள்ளிச் செல்லாது விடுமா…? எதைப் பற்றியும் சிந்திக்காது சிவனைச் சரணடை. யாவும் நல்லபடி நடக்கும்" என்றார் கதிரேசன்.

**வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாருந்**

**தாழ்துலகம் ஏத்தத் தகுவாருஞ் சூழ்ந்தமரர்**

**சென்றிறைஞ்சி ஏத்தும் திருவார் பெருந்துறையை**

**நன்றிறைஞ்சி ஏத்தும் நமர். 04**

"உண்மைதான் அண்ணை, ஊரில் மகிழ்வாகவும், நிம்மதியாகவும் வாழ்பவர்கள் உலகப் பொருட்களில் பற்றில்லாதவர்கள் தான். பற்றுப் பாசம் என்று அலைபவர்கள் தான் அவதிப்படுகின்றனர். வாகீசன் விரும்பி விட்டான் என்பதற்காக நான் நாமகளை அவனுக்குத் திருமணம் செய்து வைத்தேன். நாமகள் நல்ல பெண். சிவபக்தை. இவன் குடித்துவிட்டு வந்து மாமிசம் சமைக்கும்படி தொல்லை கொடுத்தமையால் தான் அவர்களுக்குள் பிரிவு வந்தது. நாமகளின் தந்தை தணிகாசலம் சிவபக்தர் என்று சொல்ல முடியாவிட்டாலும் சிவனை வணங்குபவர். எதையும் ஒரு பொருட்டாக எடுக்காதவர். அவர் சில தினங்களுக்கு முன் வந்து சொன்னார்; "சம்மந்தி, எனக்கு உங்களது மகனை எனது மகள் விரும்பியபோது அவளுக்கு நான் புத்திமதிகள் சொன்னேன். அவள் வாகீசனைத் தீவிரமாகக் காதலித்தமையால் எனது சொல்லைக் கேட்கவில்லை. அதனால் நீ உனது விருப்பப்படி நட. ஆனால் பின்பு பிரச்சினைகள் உருவானால் என்னிடம் வராதே. படித்தவர்களுக்கு ஆலோசனையோ, புத்திமதியோ கூற முடியாது. நாம் ஒன்று கூற அவர்கள் பத்தாகக் கூறுவார்கள். அதனால் என்ன நடந்தாலும் அது சிவன் செயல் என்று விட்டுவிட்டேன். இப்போ அவர்கள் பிரியும் அளவிற்கு வந்துவிட்டனர். இது நான் எதிர்பார்த்தது தான். ஆனால் இவ்வளவு சீக்கிரம் எதிர்பார்க்கவில்லை. அவரவர் தமது தலையெழுத்தைத் தாமே எழுதுகிறார்கள். படித்தவர்கள் அதைத் திமிருடன் எழுதுகிறார்கள். எனது சகோதரியின் மகன் செந்தூரன் இவள் பிறந்தன்றே நிட்சயிக்கப்பட்டவன். இவள் வாகீசனைக் காதலித்ததால் அவன் மனமுடைந்து பைத்தியக்காரனாகி விட்டான். அதனால் நாமகள் வாகீசனிடமிருந்து விவாகரத்துப் பெற்றநால் நான் அவளை அவனுக்குக் கட்டி வைப்பேன். அவள் இப்போது விவாகரத்துக்குச் சம்மதிப்பாள் போலத் தெரிகிறது. அது நடந்தால் நான் மகிழ்ச்சியடைவேன். ஏனென்றால் மகிழ்வுடன் வாழப் பிறந்த மனிதர்கள் ஏன் வீணாகத் துயரப்படுவான். இது என்ன உலகத்தில் நடவாத ஒன்றா" என்றார். அப்படி நான் சொல்ல முடியாமையால் தான் துன்பப்படுகிறேன்" என்றார் தம்பிராசா.

"வெறுப்பு இப்படியான முடிவுகளை எடுக்க வைக்கும். அளவுக்கதிகமான துன்பம் வாழ்க்கையைச் சீரழிக்கும். அந்த நிலைக்கு அவர் வந்து விட்டார். இதைச் சிவவழிபாட்டின் மூலம் தான் சீராக்க முடியும். "சிவ வழிபாட்டின் வாயிலாக பக்தன் மன அமைதியைப் பெறலாம். மனஅமைதி மகிழ்ச்சியைக் கொடுத்து முத்திக்கு வித்தாகிறது" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். இது அவரது மனப் பக்குவத்தைக் காட்டுகிறது. மனப்பக்குவம் அவரவரது மனத்தைப் பொறுத்தது. அதை நாம் உருவாக்க முடியாது. அவர்களே உருவாக்க வேண்டும்" என்றார் கதிரேசன்.

**நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல**

**எண்ணி எழுகோ கழிக்கரசைப் - பண்ணின்**

**மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்**

**கழியா திருந்தவனைக் காண் 05**

"தம்பிராசா, குடும்பப் பிரச்சினையுள்ளோர் சிவனோடு சேர்த்து அம்மையையும் வழிபட வேண்டும் என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். அத்துடன் "உலகெங்கும் நீங்காது குடிகொண்டிருக்கும் சிவசக்தியைச் சார்ந்திருப்போருக்கு துன்பங்கள் மறைந்தொழிகின்றன" என்றும் சொல்கிறார். ரவீந்திரனுக்கு நான் தான் திருமணம் செய்து வைத்தேன். அது பேசிச் செய்த திருமணம். ஏனோ தெரியவில்லை திருணமான சில தினங்களுக்குள் அவர்களுக்குப் பிரச்சினைகள் பலவும் வந்து பிரிந்து விட்டனர். நான் திருவாசகத்தை நம்புகிறவன். அதனால் ரவீந்திரனோடும் அவனது மனைவியோடும், அவர்களது குடும்பத்தினருடனும் சேர்ந்து அம்பிகை சமேதரராக வீற்றிருக்கும் அம்மை அப்பரை வணங்கச் சொன்னேன். சில நாட்களில் அவர்கள் சேர்ந்து விட்டார்கள். இப்போ அவர்களின் மூத்த மகனுக்கு பதினைந்து வயது. மிக்க மகிழ்வுடன் வாழ்கின்றனர். சிலருக்குத் தெய்வக் குற்றமிருக்கும். தோசம் இருக்கும். அப்படியானவர்கள் சிவனையும் சக்தியையும் வழிபட்டால் அவர்களது குறைகள் நீங்கும். நீ அவர்களுக்கு அதைச் சொல்" என்றார் கதிரேசன்.

"நான் சொன்னால் அவர்கள் கேட்கமாட்டார்கள்; அத்துடன் அவர்களது செயற்பாடுகளால் எனக்கு அவர்கள் மீதிருந்த பற்றுக்கள் நீங்கிவிட்டன. யாரும் எப்படியும் வாழட்டும். நான் கவலைப்பட மாட்டேன்" என்றார் தம்பிராசா.

"சரி, சரி நான் சொல்லிப் பார்க்கிறேன்" என்றார் கதிரேசன்

**காணுங் கரணங்கள் எல்லாம்பே ரின்பமெனப்**

**பேணும் அடியார் பிறப்பகலக் காணும்**

**பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்**

**பிரியானை வாயாரப் பேசு 06**

கதிரேசன் தம்பிராசாவின் வீட்டுக்கு வந்தபோது வாகீசன் எங்கோ புறப்பட்டுக் கொண்டிருந்தான். கதிரேசனைக் கண்டதும் "அப்பா உள்ளேயிருக்கிறார்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

"நான் அப்பாவிடம் வரவில்லை. உன்னிடம் தான் வந்தேன்" என்று கூறும்போது தம்பிராசா வந்து சொன்னார்; "நீங்கள் அவனுடன் கதைத்து மனக்கஷ்டம் அடைய வேண்டாம். நான் நீங்கள் சொன்னதைக் கேட்டபின்பு மனம் மாறிவிட்டேன். எனக்கு ஒரே ஒரு சகோதரன். அவனுக்கு ஒரு மகள். இருவரும் வெளிநாடொன்றில் வசிக்கின்றனர். அவர்கள் என்னைத் தம்முடன் வந்து சிலகாலம் தங்கியிருக்கும்படி கேட்டுள்ளனர். நான் சம்மதித்து விட்டேன். சிலகாலம் குடும்பத்தைவிட்டு விலகியிருப்பது நல்லதென்று நினைக்கிறேன். ஒவ்வொருவரினதும் உள்ளத்தில் அந்தர்யாமியாக அமர்ந்திருந்து, அங்கு எழுகின்ற எண்ணங்களுக்கெல்லாம் சாட்சியாக இருக்கும் சிவனைச் சார்ந்திருக்கும் அளவிற்கு மகிழ்வாக வாழலாம் என்று புரிந்து கொள்ளாதவர்களுடன் வாழ்வது பாவம். அதனால்தான் நான் செல்ல விரும்புகிறேன். அதை உணராதவர்களுக்கு உணர்த்த முடியாது. நீங்கள் சொல்வதைப் போல பிரிந்திருப்பது தான் நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது"

"எதற்காகத் தாத்தா என்னிடம் வந்தீர்கள்…?" என்று கேட்டான் வாகீசன்.

கதிரேசனது உள்ளத்தில் அதைச் சொல்லலாமா…? விடலாமா…? என்று யோசித்தார் கதிரேசன். பின் "இருந்து பேசுவோம்" என்றார்.

**பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த**

**மாசில் மணியின் மணிவார்த்தை பேசிப்**

**பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல**

**மருந்தினடி என்மனத்தே வைத்து. 07**

இருவரும் உள்ளே வந்து அமரத் தம்பிராசா உள்ளே சென்றார். கதிரேசனுக்கும் அவனுடன் பேசப் பிடிப்பதில்லை. தம்பிராசாவின் வற்புறுத்தலுக்காகத் தான் முன்பும் பேசியவர். இப்போதும் பேச வந்திருக்கிறார். அவன் யார் பேசுவதையும் கேட்க மாட்டான். அத்துடன் அவன் அதிகாலையிலேயே குடித்து விடுவான்.

"என்ன தாத்தா…?"

“உன்னை நினைத்து உனது தந்தை கவலைப்படகிறார். உனது மனைவியின் தந்தை தனது மகளுக்கு உன்னை விவாகரத்துச் செய்யுமாறு வலியுறுத்துகிறார். உனது மனைவியும் அவளது பெற்றோரும் மிகவும் நல்லவர்கள். சிவபக்தர்கள். உனது தந்தை நேற்று வந்து உன்னிடம் பேசுமாறு கூறினார். ஆனால் இப்போ நான் வந்தபோது பேச வேண்டாம் அவன் உங்களது பேச்சைக் கேட்க மாட்டான் என்கிறார். அதனால் நான் பேசுவதால் பயனில்லை” என்றார் கதிரேசன்.

வாகீசன் எதுவும் பேசவில்லை. “நான் சிவபக்தன். பொய் பேசுவதில்லை. யாருடனும் தேவையில்லாமலும் பேசுவதில்லை. உனது தந்தையின் தந்தை எனது நண்பர். மிகவும் நல்லவர். நாங்கள் இருவரும் சேர்ந்து பலகாலம் சிவனுக்குச் சேவை செய்தோம். அவர் இறந்து விட்டார். சிவனை மாசிலாமணியென்று மக்கள் அழைப்பர். அவனுக்கு எந்தத் தோசமுமில்லாமையால் அவனை அப்படிச் சிவனடியார்கள் அழைக்கின்றனர். அவனும் அம்மையும் மனிதர்களுக்குண்டான தோசங்களையும், துன்பங்களையும் நீக்குபவர்கள். அத்துடன் உலகம் முழுவதிலும் நீக்கமறக் கலந்திருக்கும் அகண்ட பொருள். அவன் எமது உள்ளத்தில் இருந்திருந்து எம்மை வழிப்படுத்துகிறான். அத்துடன் துன்பத்தைத்தரும் பிறவிப்பிணியையும் போக்கி விடுகிறான். அத்தகையவனை வணங்குவோர் இன்பமாக வாழ்வர். அதைச் சொல்லும்படி பலமுறை உனது தந்தை வற்புறுத்தியதால் வந்தேன். இங்கு உள்ள நிலைமையைப் பார்த்தால் அது தேவையில்லைப் போலத் தெரிகிறது” என்று கூறிவிட்டு எழுந்தார் கதிரேசன்.

“இருங்கோ தாத்தா, சிறு வயதில் ஐங்கரன் ஆசிரியரின் துர்ப்போதனை எனது மனதில் ஆழப்பதிந்தமையால் எனது மனம் குழம்பிவிட்டது. அதனால் பெரும் துன்பங்கள் வருகின்றன. எனது மனைவி என்னைவிட்டுப் பிரிந்து செல்ல முடிவு செய்து விட்டாள். அதனால் நான் பெரும் துன்பத்திற்காளாகியுள்ளேன். அதைத் தடுக்கும் வல்லமை உங்களுக்கு மட்டும்தான் உண்டு. நான் திருந்தி வாழ ஆசைப்படுகிறேன். அதற்கு ஆவன செய்யுங்கள்” என்று அழுதான் வாகீசன்.

“சரி சரி அழாதை. நான் நாமகளுடனும் அவளது தந்தையுடனும் கதைக்கிறேன்” என்றார் கதிரேசன். அதைக் கேட்ட வாகீசனின் மனம் ஆறுதல் அடைந்தது.

*திருச்சிற்றம்பலம்.*